# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் – 15.07.2026

**(காணொளி காட்சி விசாரணை)**

## முன்னிலை

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**

**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். SA 1632/A/2024

திரு. ஜெ. ஜெயின் ஷாஜி -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி பொறியாளர் (பொறியியல் பிரிவு),
நாகர்கோவில் மாநகராட்சி, -- பொது அதிகார அமைப்பு
நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் .

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (15.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் | திரு. ஜெ. ஜெயின் ஷாஜி அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார் |
| பொது அதிகார அமைப்பு | திரு. N. சுப்பையன்<br>பொதுத் தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர், நாகர்கோவில் மாநகராட்சி அவர்கள் நேரில் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 12.10.2023 |
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், நாகர்கோவில் மாநகராட்சி 14-வது வார்டுக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள சுப்பையார் குளத்தை தூர் வாரும் பணிக்கு போடப்பட்ட ஒப்பந்த பத்திர நகல் உட்பட 16 இனங்களில் தனக்கு தகவல்களாக வழங்கக்கோரி விண்ணப்பித்துள்ளார். | |
| சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் மனு மாற்றம் செய்த நாள் | ---- |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள் | 09.11.2023 |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 13.11.2023 |

| | |
|---|---|
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள் | ---- |
| பிரிவு 19(3) இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 09.02.2024 |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் திரு. N. சுப்பையன், பொதுத் தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர், நாகர்கோவில் மாநகராட்சி அவர்கள், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு 16614/2023/த.அ.உ.ச, 09.11.2023, 16614/2023/த.அ.உ.ச, 13.12.2023 மற்றும் 16614/2023/த.அ.உ.ச, 28.10.2024 நாளிட்ட கடிதங்களின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலராலும், 16614/2023/த.அ.உ.ச, 13.12.2023 மற்றும் 16614/2023/த.அ.உ.ச, 26.02.2024 நாளிட்ட கடிதங்களின் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலராலும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அவற்றின் நகல் மற்றும் மனுதாரர் தகவல்களை பெற்றுக்கொண்டு அளித்த ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

3. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், தான் கோரிய தகவல்களில் சில இனங்களுக்கான தகவல் தகவறான அளிக்கப்பட்டிருப்பதாத் தெரிவித்து அவ்வினங்களுக்கு உரிய தகவல் பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கோரினார்.

4, இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், பொதுத் தகவல் அலுவலரால் முழுமையான தகவல்கள் அளிக்கப்படவில்லை என ஆணையம் கருதுகிறது. எனவே, பொதுத்தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து பின்வருமாறு உத்தரவிடுகிறது :-

- ***மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு உரிய தகவல் அளிக்காத திரு.S.சுஜின், உதவி பொறியாளர், நாகர்கோவில் மாநகராட்சி, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்களின் மீது தகவல் அறியும் உரிமை சட்டம், 2005, பிரிவு 20(1), 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான காரண விளக்கங்களை 12.08.2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது. அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்களுக்கு இக்கடிதத்தினை சார்வு செய்ய தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்களுக்கு இவ்வாணையத்தால் உத்தரவிடப்படுகிறது.***

- ***மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள தகவல்களில் இனம் 5,11,12 மற்றும் 14-க்கான தகவல்களை <u>“தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது” என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சலக இணையதள ஒப்புகை சீட்டின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு***

*அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 12.08.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகின்றது.*

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 1632/A/2024**
**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்/
உதவி பொறியாளர் (பொறியியல் பிரிவு),
நாகர்கோவில் மாநகராட்சி,
நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம் - 629 001.

**மனுதாரர்**
திரு. ஜெ. ஜெயின் ஷாஜி
ஜீசஸ் டொமிசில்,
சந்தோஷ் நகர்,
கேசவதிருப்பபுரம்,
வெட்டூர்ணிமடம்,
நாகர்கோ1வில்,
கன்னியாகுமரி - 629 003.

Copy to file

KRM/PA 15.07.2026